


கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம் கஞ்சம்பட்டி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.50 இலட்சம் மதிப்பிலும், அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக ஆறு வகுப்பறை கட்டிடங்கள் ரூ.23 இலட்சம் மதிப்பிலும் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். அருகில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சார் ஆட்சியர் செல்வி. கேத்ரின் சரண்யா, வட்டாட்சியர் வேல்முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜென்கின்ஸ், மோன்பாபு, உள்ளிட்ட பலர் உள்ளனர்.




கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் கல்பனா கல்யாண மண்டபத்தில் நேற்று (27.12.2024) மாநில அளவிலன கைத்தறி கண்காட்சியின் மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் முதல் விற்பனையை துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அருகில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலர் திருமதி.வே.அமுதவல்லி, கைத்தறித்துறை இயக்குநர் அ.சண்முகசுந்தரம், இணை இயக்குநர் ப.மாதேஸ்வரன் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி.கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மாமன்ற உறுப்பினர் திருமதி. ப.வே.சுபஸ்ரீ, கைத்தறி துறை உதவி இயக்குநர் கொ.வெற்றிவேல் உட்பட பலர் உள்ளனர்.

### பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் தலைமை! அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# பம்மல் வடக்கு பகுதியில் துணை முதல்வர் பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

### டி.ஆர்.பாலு -- குடியாத்தம் புவியரசி -- கா.பார்கவி - - இ கருணாநிதி எம்.எல்.ஏ - - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச.28 - தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா குளக்கரை தெரு, அனகாபுத்தூரில் பம்மல் வடக்குப் பகுதி கழகம் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்திற்கு பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் தலைமை வகித்தார்.

கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா. பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, மு.நித்தியானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். துணை மேயர் கோ.காமராஜ், மாநகர கழக அவைத்தலைவர் இரா. நரேஷ்கண்ணா எம்.சி. ஆகியோர் வரவேற்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, தலைமைக் கழக பேச்சாளர்கள் குடியாத்தம் புவியரசி, கா.பார்கவி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, கே.விவேகானந்தன் (எ) ரவி, ந.நடராஜன் இ.எஸ்.பெர னார்ட், ஏ.கே.கருணாகரன், இரா.சுரேஷ், அ.தமிழ்மாறன், எஸ்.சதீஷ், இரா. பொன்ராம், கோல்டு டி.பிரகாஷ், வ.விஜயரங்கன், பொன்.சதாசிவம், க. தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு.ரஞ்சன், பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், சி.கே.ஜெகதீஸ்வரன்,பி.பிரசாத், பா.டில்லி, க.தனசேகரன், பி.கே.ஏ. சத்தியபிரபு,வீ. கார்த்திக், வே.சிவசுப்பிரமணியன், விக்கி (எ) விக்னேஷ்வரன், ஆர்.எஸ்.கிருத்திகாதேவி, ப.அன்பழகன், க.மோகன், மு.நி. தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ. பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணிபிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ராதமிழ்குமரன், சண்முகசுந்தரிஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன், ந.மூவேந்தன், சா.குணா, க.பசுபதி, பி.சிவசங்கரய்யா, மலர்மு.கருணாநிதி, எஸ்.லாசர், எம்.சரவணன், எம்.டி.விஜயகுமார், எஸ்.சிவா, ஜி.கே.அரவிந்த்ராஜ், தி.க.நடராஜன், எஸ். மௌலிராஜன், ப.டேனியல், சந்துரு, சௌ. ஆரோக்கியராஜ், மோ.சுதாகர், எச். கே.வெங்கடேசன், பி.பிரபாகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

எ.செந்தில்குமார், ஆர். முரளிதரன், மு.தேவேந்திரன், ந.சோனை ஆகியோர் நன்றி கூறினர்.

### கி.கண்ணன் ஏற்பாடு ! வை.ம.அருள்தாசன் தலைமை !

# 6 வது வட்ட தி.மு.கழகம் சார்பில் பொது மருத்துவ முகாம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம், கலாநிதி வீராசாமி, கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை டிச.28

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி 6வது வட்ட தி.மு.க.சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏ.எம்.பவுண்டேஷன் மற்றும் தழிழ்நாடு பெட்ரோப்ராடக்ஸ் லிமிடெட் இலவச பொதுமருத்துவ முகாம் மற்றும் தோல் சிகிச்சை முகாம் இன்று ( 28.12.2024 சனிக்கிழமை) காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 4வது தெரு, ராஜாசண்முகம் நகர் திருவொற்றியூர் செ19ல் நடைபெறுகிறது.

6வது வட்ட கழக செயலாளர் கி.கண்ணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன் தலைமை வகிக்கிறார்.

திருவொற்றியூர் எஸ். கணேசஷ், ஆர்.தினேஷ் குமார், எஸ்.மகேந்திரன், எஸ்.ஆர்.மலைராஜ், ஆர். மோகனசுந்தரம், எம்.கார்த்திக், ஜி.தினேஷ், என்.ராம்குமார்,முருகா எஸ்.ஆறுமுகம், ஆகியோர் வரவேற்கினறனர்.

என்.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ்.குரளரசன், எ. இந்துமதி, எம்.வஜ்ரவேல், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ,டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி,கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, வி.கண்ணதாசன், தி.மு.தனியரசு எம்.சி, ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் ஆகியோர் மருத்துவ முகாமை திறந்து வைத்து சிறப்பிக்கிறார்கள்.

கே.பவுல், ஆர்.டி.மதன் குமார், வை.ம.கண்ணதாசன், ஆர்.நவகுமார், எஸ். சேகர், எம்.லோகநாதன், கே.முரளி, எல்.பொன்ராஜ், முரசொலி ஜி.குமரேசன், க.உதயகுமார், டி.லோகநாகன், வி.மணிகண்டன், டி. மீரா, எஸ்.ஜானகிராமன், ஆர்.தனசேகர், கே.விஜயகுமார், எம்.செல்வராஜ்,

என்.மோகன், பி.பாலு நாயக்கர், எம்.சசி, ஜெ.உதயசந்திரன், வி.ஏழுமலை, என்.அண்ணாமலை, பி.கமலகண்ணன், எஸ்.சீதாபதி, எம்.வரதன், ஏ.எப்.ஜான்சன், எம்.சம்பத், எம்.கோட்டீஸ்வரன், பி.சாமிநாதன், ஜெயராமன், பி.தட்சிணாமூர்த்தி, ஏ.சம்பத், ஆர்.செந்தில்குமார், ஆர்.அனந்தகிருஷ்ணன், ஹரிகிருஷ்ணன், டி.துரை, விக்னேஷ், கே. ராஜ்குமார், எஸ்.அருள்குமார், வி.மாதவன், என். கோவிந்தராஜ், என்.ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

### க.கோவிந்தராஜ் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ் - சி.பி.திருமலை முன்னிலை! நாஞ்சில் சம்பத் - கீர்த்தனா சிறப்புரை!

# அண்ணாநகர் 101 வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம் - 1000 பேருக்கு நலஉதவிகள்!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் நலஉதவிகள் வழங்குகின்றனர்!

சென்னை, டிச. 28 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (28.12.2024 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னை, அண்ணாநகர் கிழக்கு, டி.பிளாக், ஆர்.வி. நகரில் நடைபெறுகிறது.

101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார்.

101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, வி.ராஜேந்திரன், ஜெ.வீரமணி, டி.தயாளரங்கன், டி.சம்மந்தா, என்.அரவிந்த்குமார், ஆர்.ஜி.ராகவநாயகம், எம். பாலசந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.முரளிகிருஷ்ணன், எஸ்.ஆர்.பாஸ்கர், ஜெ. மகேஸ்வரி, டி.ஜெ.முருகன், ஆர்.புருஷோத்தமன், டி.ராஜீ, வி.கண்ணன், எம். குணசேகரன், கே.செந்தில், வி.ஆர்.சதீஷ்குமார், பி.குப்புசாமி, என்.மகேஷ், கே.தினேஷ்குமார், எ.அசோக்குமார், இ.கல்பனா, என்.எஸ்.சரவணன், எம்.கோவிந்தசாமி, பொன்.கண்ணபிரான், கீதா சிகாமணி, என்.முரளி, சிவகாமி செல்வராஜ், ஜி.பி.ராஜா ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் பேச்சாளர் நாஞ்சில் சம்பத், இளம் பேச்சாளர் கீர்த்தனா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், அண்ணாநகர் தொகுதி பார்வையாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

இதில் எஸ்.சேரன், ஏ. டி.முருகன், கராத்தே என். ஆனந்த், ராணி ரவிச்சந்திரன் எம்.சி, டாக்டர் சந்திரபாபு, மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆ.ஏகாம்பரம், கு.பாபு, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி. ஜெய்சங்கர், அருள் கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் வசந்தி பரமசிவம், புஷ்பலதா ஜெய்சங்கர், பகுதி நிர்வாகிகள் பா.பிரபு, வி.சாய்செல்வம், கே.பி. சுரேந்தர், இரா.இளங்கோவன், மாவட்டப் பிரதி நிதிகள் கே.பாலாஜி, எஸ். ஜெயகாந்த், இரா.வேல்முருகன், பி.வின்ஜா ஸ்டாலின், மா.மோகன், த.குணசேகர், எம்.வாசு, எஸ்.செல்வம் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.

101 வது வட்ட துணைச் செயலாளர் ஐ.சி.எப்.பி. வேலாயுதம் நன்றி கூறுகிறார்.

### ஆ.தீபக் சாமுவேல் தலைமை! ப.குணாளன் - என்.சந்திரன் - கோல்டு டி.பிரகாஷ் பங்கேற்பு!

# ஆலந்தூர் வடக்கு பகுதியில் கிறிஸ்துமஸ்-புத்தாண்டு- பொங்கல் விழா!

### 500 நபர்களுக்கு நலஉதவிகளை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்!

சென்னை,டிச.28-

காஞ்சி வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க சிறுபான்மை அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.தீபக் சாமுவேல் தலைமையில் சமத்துவ கிருஸ்துமஸ் விழா இனிய புத்தாண்டு 2025 (ம) பொங்கல் விழா இன்று (28.12.2024 சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ப.குணாளன், பகுதிச் செயலாளர் - மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன், மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் கோல்டு டி.பிரகாஷ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

### அண்ணா அறிவாலயம் - கலைஞர் கருவூலக ஊழியர்

# தா.ஸ்டீபன் மகன் எஸ்.அருண் படத்திறப்பு!

### ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி- ஐட்ரீம் மூர்த்தி பங்கேற்பு!



சென்னை. டிச.28

சென்னை அண்ணா அறிவாலயம், “கலைஞர் கருவூலத்தில் பணியாற்றி வரும் ஊழியரும் - சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி, 50வது வட்டக் கழக துணைச் செயலாளர் தா.ஸ்டீபன் அவர்களின் மூத்த மகன் எஸ். அருண் அவர்கள் கடந்த 19.12.2024 மறைவெய்தினார்.

அன்னாரது திருவுருவப் படத் திறப்பு நிகழ்ச்சி நாளை (29.12.2024 -ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணி அளவில், இராயபுரம் “அறிவகத்தில்” இராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில், ஆர்.வி.கணேஷ், அ.ஞானசேகரன், எஸ்.சீனிவாசன், மு.கலியமூர்த்தி, ஜி.ஜெயராஜ், கிருஷ்ணவேணி, பி.சதிஷ்குமார், கே. கணேசன் ஆகியோர் வரவேற்புரையில் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளரும் - பெரம்பூர் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர் படத்தை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி, எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர், எம்.எல்.ஏ. மற்றும் வ.பெ.சுரேஷ், தா.இளைய அருணா, இரா.மதிவாணன், பி.டி.பாண்டிசெல்வம், அறிவாலயம் பொன்.தனபால், வே.சிவகுமார் ப.சோம சுந்தரமூர்த்தி, லயோலா கே. மதன், தா.ஜெயபால், பி. சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், க. கலைச்செல்வன், ஜி.சதீஷ்குமார், என்.கிருஷ்ணன், க. கோவிந்தராஜ், பி.கண்ணன், ஏ.அன்வர், சு.சேகர், எஸ்.ஆண்ரூ, யூ.அனிபா, ப. பிரபாகரன், கே.சிவதனுஷ், பி.மகேந்திரன், கே.எஸ். குமார், சிமென் கே.ரங்கராஜ், எம்.டில்லிபாபு, ஏ. லோகேஸ்வரன், எஸ்.சூரிய பிரகாஷ், ஆர்.இஸ்மாயில், அறிவகம் எஸ்.ஏ.ராஜா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக, 50வது வட்ட துணைச் செயலாளர் தா.ஸ்டீபன் மற்றும் இராயபுரம் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.பொன்னரசன், எஸ்.வினித் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

### டி.என்.பி.எஸ்.சி. IV போட்டித் தேர்வுக்கான

# கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.28-

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் 38 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக TNPSC GROUP II முதல் TNPSC GROUP II Mains மற்றும் TNPSC - GROUP - IV போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலம் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகளில் ஆண்டுதோறும் 20000 ற்கும் மேற்பட்ட மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர். மேலும், இப்பயிற்சி வகுப்புகளின் மூலம், அதிக அளவிலான மாணவ / மாணவியர்கள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பல்வேறு அரசு வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

தற்போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள தொகுதி - I V (TNPSC GROUP I V) தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்பு அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 31.12.2024 அன்று காலை 10.00 மணியளவில் துவங்கப்பட உள்ளது. இக்கட்டணமில்லா பயிற்சி வகுப்பில் அதிக அளவிலான மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு தேர்வுகளில் வெற்றி பெற்று அரசு வேலையை பெற அரியலூர் மாவட்டத்திலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை அணுகுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தின் 9499055914 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ அறிவுறுத்தலின்படி தாம்பரம் மாநகராட்சி 4 வது மண்டலத்திற்குட்பட்ட 49 வது வட்டத்தில் உள்ள காந்தி சாலை, அண்ணா பேருந்து நிலையம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளை மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் து.காமராஜ் ஆய்வு மேற்கொண்டார். இதில் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும் ஆக்கிரமிப்புகள் மற்றும் மழை நீர் வடிகால்களை உடன் வருகை தந்த மாநகராட்சி பொறியாளர் தங்கதுறை அவர்களிடம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக சரிசெய்து தரும்படி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். உடன் மாநகராட்சி அதிகாரிகள் சுகதார துறை அதிகாரி சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பம்மல் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிறப்பு பேச்சாளர் குடியாத்தம் புவியரசி , இளம் பேச்சாளர் பார்கவி ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன் உள்ளனர்.